**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 10.02.2026

அசல் வழக்கு எண். 110/2011

பி.சா.1 – ஆனந்தன், த/பெ. சொர்ணபாண்டி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களது நிரந்தர முகவரி என்ன என்றால் ஆழ்வார் திருநகர் சென்னை 87 கதவு எண் 2 முதல் குறுக்கு அண்ணா சாலை ஆகும், 1983ல் இருந்து அங்கு வசிக்கிறேன். மல்லிகா என்பவரிடம் நீங்கள் பணிபுரிந்தீர்களா? என்றால் அவரது கணவர் ரமேஷ் என்னுடைய மாமா மகன் ஆகவே உறவினர் அதன் அடிப்படையில் அவர்களுடைய நிறுவனங்களை நிர்வாகித்து வந்தேன். நிர்வாகத்தில் என்னவாக பணிபுரிந்தீர்கள் என்றால் மேனேஜராக பணி புரிந்தேன் அவ்வாறு மேனேஜராக பணிபுரிந்ததற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் பொது அதிகார பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். உங்களுக்கு எவ்வளவு சம்பளம் என்றால் ரூ.3,000/– சம்பளம் ஆகும் அந்த காலத்தில் அவ்வளவு தான் கொடுத்தார்கள். எந்த காலத்தில் வேலை செய்தீர்கள் 2007 லிருந்து 2009 வரை வேலை செய்தேன். ரமேஷ் உறவினர் என்கிற அடிப்படையில் தான் தெரியும் மற்ற தொடர்புகள் தெரியாது என்றால் தெரியாது. 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறுவனத்திற்கு தொடர்பு இல்லை என்றால் சரிதான். பிரமாணத்தில் உள்ள விவரங்கள் மல்லிகா சொல்லி போட்டீர்களா ரமேஷ் சொல்லி போட்டீர்களா என்றால் மல்லிகா சொல்லி தான் போட்டேன். வழக்கு விவரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது மல்லிகா சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் எனக்கு நேரடியாகவே தெரியும். வழக்கில் என்னென்ன

ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்கிற விவரங்கள் தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாடகை ஒப்பந்தம் குறித்து ஆவணங்கள் உள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பு உள்ளது வேறு ஆவணங்கள் பற்றி தெரியாது என்றால் போலீஸ் புகார் கொடுத்ததாக சொல்லி உள்ளார். இந்த வாக்குமூலம் தயார் செய்யும் பொழுது மல்லிகா சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்துள்ளேன். எப்பொழுது கொடுத்தீர்கள் என்றால் 15.10.2009 ஆம் ஆண்டு பாலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அவர்கள் வாங்க மறுத்துவிட்டார்கள். கடந்த 16.10.2009 ஆம் ஆண்டு பதிவு தபாலில் அனுப்பினேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை அவரை நீங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. உங்களுடைய வாக்குமூலத்தில் மல்லிகா என்பவர் கடந்த 15.10.2009 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டதால் சென்னை உயர்நீதிமன்றத்தில் கிரிமினல் ஓ பி மனு தாக்கல் செய்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் மல்லிகா கொடுக்கவில்லை. நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு தான் சொல்லி உள்ளீர்கள் தற்பொழுது வழக்கிற்காக மாற்றி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் மல்லிகா என்பவருடன் காவல் நிலையம் சென்றீர்களா என்றால் மல்லிகா வரவில்லை நான் மட்டும்தான் சென்றேன் உடன் ரமேஷ் வந்தாரா என்றால் ரமேஷும் வரவில்லை நான் மட்டும்தான் சென்றேன்.

எதிர்த்தரப்பினர் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் சாராம்சம் என்ன தெரியுமா என்றால் தெரியும். சொத்தில் இருந்த இயந்திரங்களை கிரேன் வைத்து எடுத்துச் சென்று விட்டதால் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கிரிமினல் ஓ.பி நிலுவையில் இருப்பதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் போலீஸ் விசாரணையில் நிலுவையில் இருப்பதாகத்தான் அதற்கு பொருள் ஆகும் ஆக கிரிமினல் ஓ.பி முடிவடைந்துவிட்டது. மனுவின் பேரில் நடவடிக்கை எடுக்க சொல்லி முடித்து விட்டார்கள். அதன் பிறகு நடவடிக்கை எடுத்தார்களா என்றால் போலீசார் அரசியல் செல்வாக்கால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே நீங்கள் கொடுத்த புகாரின் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் முடிந்து விட்டது என்று நீங்கள் கூறுகிறீர்கள் என்றால் புகார் முடிக்கப்பட்டதா இல்லையா என்பது எனக்கு தெரியாது. புகார் முடித்துவிட்டார்களா இல்லையா என்பது நீங்கள் காவல் நிலையம் சென்று தெரிந்து கொண்டீர்களா என்றால் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம். அரசியல் செல்வாக்கால் புகார் முடிக்கப்பட்டது என்று கூறினீர்கள் அது பற்றி காவல் நிலையத்தில் அணுகி எந்த அடிப்படையில் முடிக்கப்பட்டது அல்லது நிலுவையில் இருக்கிறதா என்கிற விவரங்களை தெரிந்து கொண்டீர்களா என்றால் தொடர்ந்து சென்று பார்த்தோம் தகவல் தெரியவில்லை. வழக்கில் பதிலுரை தாக்கல் செய்தார்கள் படித்துப் பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். மல்லிகா படித்துக் காட்டினார்களா என்றால் வக்கீல் அலுவலகத்தில் படித்துக் காட்டினார்கள். அப்பொழுது வழக்கறிஞர் அலுவலகத்திற்கு மல்லிகா

வந்து இருந்தார்களா என்றால் இல்லை. ஆக நீங்களாகவே தான் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று பிரமாண வாக்குமூலம் தயார் செய்தீர்கள் என்றால் சரிதான் படித்துக் காட்டினார்கள். வாதியின் வழக்கறிஞரின் வேண்டுக்கோலின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.